மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Contributions of Foreigners to the Development of Tamil Dictionary

M. Kayalvizhy

Assistant Professor, Department of Tamil, Pacchiyappas college for Women, Kancheepuram

Manuscript ID : **MT22A0022**

Volume :**2**

Issue :**1**

Month :**March**

Year :**2022**

Received: 14.01.2022

Revised:19.01.2022

Accepted: 28.01.2022

Published: 10.02.2022

Pages : 16-22

ABSTRACT:

Dictionary is very important basic factor for the language. In Tamil the dictionary has a vast history and it was called as "Nigandus". But the scientific dictionary was only produced by the western scholars. The European missionaries came here and contributed much in the field of Tamil dictionary. They followed the European method of dictionary making. Father Constantino Guiseppe Beschi is called as father of Tamil dictionary for his contribution in the field of dictionary making.

KEYWORDS:

Dictionary making, Foreign scholars, Missionaries, Father Beschi

REFERENCE:

1. Veerasamy.T.V, Art of Dictionary (1989) Chennai: TamilPuthagalayam
2. Mathayan.P, Agarathiyiyal, (1977) Tanjavour: Tamil University
3. Balasubramaniyam.C, (1959) History of Tamil Literature, Chennai: Manamalar Publications
4. Varatharajan.M, (1972) History of Tamil Literature, New Delhi: SakithyaAcademy

அன்னைத் தமிழ் அகராதி வளர்ச்சிக்கு அயல்நாட்டவரின் அரும்பங்கு

மு. கயல்விழி

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த் துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம், இந்தியா

கட்டுரைச்சுருக்கம்

அகராதி என்பது மொழிக்கு அடிப்படையான ஒன்றாகும். அது மொழியுடனே வளரக் கூடியது. தமிழில் அகராதி வரலாறு என்பது பழமையானதாகும். ஆரம்பத்தில் அவை “நிகண்டுகள்” என்றழைக்கப்பட்டன. பின்னர்த் தமிழகம் வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் தமிழில் பல்வகையான அகராதிகளை உருவாக்கியளித்தனர். அவை ஐரோப்பிய முறையில் அமைந்தன. குறிப்பாக வீரமாமுனிவர் தமிழ் அகராதி வளர்ச்சிக்கு ஆற்றிய பணி அளப்பரியதாகும். அறிவியல் பூர்வமான அகராதி என்பது வெளிநாட்டு பாதிரிமார்களால் தான் உருவாக்கப்பட்டது. வீரமாமுனிவர் தமிழ் அகராதி வளர்ச்சிக்கு ஆற்றிய பணியின் காரணமாகத் “தமிழ் அகராதிஇயலின் தந்தை” என்று போற்றப்படுகின்றார்.

கருச்சொற்கள்

தமிழ் அகராதி, நிகண்டுகள், ஐரோப்பியர் பங்கு, வீரமாமுனிவர்.

முன்னுரை

அகராதி என்பது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும். அது மொழியின் வளர்ச்சியுடனே வளர்ந்து வருவதாகும். அகராதியை உருவாக்குவது என்பது அரும் பணியாகும். சார்ந்த மொழியில் முழுமையான புலமையுடையோர் மட்டுமே இப்பணியாற்ற இயலும். நம் தமிழ் மொழியில் அகராதியின் அவசியத்தை நன்குணர்ந்த நம் அறிவுசார்ந்த முன்னோர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகண்டுகள் என்ற அகராதியை உருவாக்கியளித்தனர். ஆனால் நிகண்டுகள் முழுமையாக அகராதி என்ற நிலையைப் பெறவில்லை. தமிழில் முழுமையான, அறிவியல் பூர்வமான அகராதி என்பது மேல்நாட்டவர் வருகையினின்றே துவங்குகின்றது. மொழி வளர்ச்சிக்கு அகராதியின் அவசியத்தை நன்குணர்ந்த மேல் நாட்டு அறிஞர்கள் குறிப்பாகப் பாதிரிமார்கள் இங்குள்ள பிராந்திய மொழிகளை ஆழக்கற்று முழுமையான அகராதியை உருவாக்க முனைந்தனர். அவர்களைப்

பின்பற்றியே நம் நாட்டு அறிஞர்களும் அகராதியை உருவாக்க முனைந்தனர். தமிழ் மொழி வளர்ச்சிக்கு மேல் நாட்டவர் ஆற்றிய அரும் பணிகளில் அகராதி உருவாக்கம் என்பது முதன்மையானதாகும். அவர்களே முழுமையான, முறையான, அறிவியல் பூர்வமான அகராதியை உருவாக்கி நமக்கு அளித்து விட்டுச் சென்றனர். மேல்நாட்டவர் நமக்களித்த அகராதிகளின் பங்களிப்பைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழ்-போர்ச்சுக்கீசிய அகராதி

தமிழில் பிற நாட்டவர் தொகுத்த முதல் அகராதி இதுவேயாகும். கி.பி.1679இல் கேரளாவில் உள்ள அம்பலக்காடு(Ambazhakad) என்ற இடத்தில் இது உருவாக்கப்பட்டது. ஆந்தம் தெ ப்ரோயன்சா(Fr.Antem de Proenca) என்ற பாதிரியாரால் இது உருவாக்கப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு மலாய் பல்கலைக்கழகத்தின் மூலம் கி.பி.1966இல் தனிநாயகம் அடிகளால்(Xavier Thaninayagam) வெளியிடப்பட்டது. இது 246 பக்கங்களும் 16,546 சொற்கள் கொண்டுள்ளது. தமிழ்ச் சொற்களை அகரவரிசையில் முதலில் நிறுத்தி அவற்றிற்கு நேரான போர்ச்சுக்கீசிய சொற்களை எதிர் பக்கத்தில் கொடுத்திருப்பது இவ்வகராதியின் சிறப்பாகும்.

திக்சியனரியம் தமுலிசம்(Dictionarium Tamulicum)

இவ்வகராதி கி.பி.1712இல் பார்தால்மாஸ் சியஜன்பால்க்(Mr.Bartholmaeus Ziegenbalg) என்ற பாதிரியாரால் உருவாக்கப்பட்டது. இதன் சிறப்பின்மை காரணமாக இது புகழ் பெறாமல் போயிற்று.

சதுரகராதி

“தமிழ் அகராதியின் தந்தை“(Father of Tamil Dictionary) என்று புகழப்படும் வீரமாமுனிவர் என்ற பெஸ்கி பாதிரியாரால்(Rev.Constantino Giuseppe Beschi) கி.பி.1732இல் இவ்வகராதி உருவாக்கப்பட்டது. பிற அகராதிகளுக்கு முன் உதாரணமாக இவ்வகராதி இன்று வரை திகழ்கின்றது. ஏறத்தாழ 12,000 சொற்கள் இவ்வகராதியில் உள்ளன. எல்லீஸ் பாதிரியார்(Fr.Whyte Ellis) கி.பி.1819லும் ஜே.ஸ்மித் பாதிரியார்(Rev.J.Smith) கி.பி.1935லும், நம் நாட்டைச் சார்ந்த தாண்டவராய முதலியார் மற்றும் இராமச்சந்திரகவிராயர் ஆகியோர் கி.பி.1842லும் சதுரகராதியைப் பதிப்பித்தனர். இது பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்று நான்கு பிரிவுகளைக் கொண்டது. முதலெழுத்து அல்லது இரண்டாம் எழுத்தோடு சொற்கள் நின்று விடாமல் கடைசி எழுத்துவரை அகரவரிசை படுத்தப்பட்டுத் தமிழுக்கு நேரே தமிழ்ச் சொல்லில் பொருள் கூறுவது இதன் சிறப்பு.

தமிழ்-இலத்தீன் அகராதி

இதுவும் பெஸ்கி பாதிரியாரால் கி.பி1742இல் தொகுக்கப்பட்டது. இதில் 9000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் சொல்லுக்கு நேராக இலத்தீன் மொழிச் சொல்லால் பொருளை உரைப்பது இதன் சிறப்பாகும்.

இலத்தீன்-தமிழ் அகராதி

இது பெஸ்கி பாதிரியாரால் உருவாக்கப்பட்டது. இலத்தீன் சொல்லுக்கு நேராகத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறுவது இதன் சிறப்பாகும்.

தமிழ்-பிரெஞ்சு அகராதி

இது கி.பி.1744இல் பெஸ்கி பாதிரியாரால் உருவாக்கப்பட்டது. இதில் தமிழ்ச் சொல்லுக்கு நேரே பிரெஞ்சு சொல்லில் பொருள் கூறப்பட்டுள்ளது. இது கையால் எழுதப்பட்டு சைலோஸ்டைல்(Cyelostyle) என்ற எந்திரப் பொறியின் மூலம் பதுப்பிக்கப்பட்டது.

தமிழ்-ஆங்கில அகராதி

இதுவும் பெஸ்கி பாதிரியாராலேயே தொகுக்கப்பட்டது. தமிழ்ச் சொல்லுக்கு நேரே ஆங்கிலச் சொல்லில் பொருள் கூறும் முறை இதில் பின்பற்றப்பட்டுள்ளது.

போர்ச்சுக்கீசிய-இலத்தீன்-தமிழ் அகராதி

இது பெஸ்கி பாதிரியாரால் கி.பி.1744இல் தொகுக்கப்பட்டது. போர்ச்சுக்கீசிய சொல்லுக்கு நேரே இலத்தீன் சொல்லும் அதற்கு நேரே தமிழ்ச் சொல்லிலும் பொருள் கூறுவதாக இது அமைக்கப்பட்டுள்ளது.

வட்டார வழக்கு தமிழ் அகராதி

பெஸ்கி பாதிரியாரின் மற்றொரு சிறப்பான படைப்பு இது. சாதாரணப் பொதுமக்கள் பேசும் அக்கால வழக்குச் சொற்களுக்குத் தமிழில் பொருள் கூறுவது இவ்வகராதியின் சிறப்பாகும்.

பாப்பிரிசியஸ் தமிழ்-ஆங்கில அகராதி

இவ்வகராதி சென்னையில் கி.பி.1779இல் ஜான் பிலிப் பாப்பிரிசியஸ்(Mr.John Philip Fabricius) மற்றும் ஜான் கிறிஸ்டியன் ப்ரெய்தாயிட்(Mr.JohnChristian Breithaupt) என்ற இரண்டு பாதிரிமார்களால் உருவாக்கப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு போயசால்டு

(Rev.Poezold) மற்றும் வில்லியம் சிம்சன்(Mr.William Simson) என்ற இரண்டு பாதிரிமார்களால் கி.பி.1809இல் சென்னை வேப்பேரியில் அச்சிடப்பட்டது. இது 185 பக்கங்களும் 9000 ஆயிரம் சொற்களும் கொண்டுள்ளது. தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதி இது. இலக்கியச் சொற்களுடன் அன்றாடம் புழங்கும் சொற்களும், மரபுத் தொடர்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

அகராதித் தமிழ்

இது பெலின்(Mr.A.Belin) என்ற பாதிரியாரால் கி.பி.1831இல் உருவாக்கப்பட்டது. இது இரண்டு பாகங்களும் 282 பக்கங்களும் கொண்டது. கையெழுத்துப் பிரதியாகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியின் முதல் பாகத்தில் பிரெஞ்சு சொல்லுக்குத் தமிழ்ப் பொருளும் இரண்டாம் பாகத்தில் தமிழ்ச் சொல்லுக்குப் பிரெஞ்சு பொருளும் கூறப்பட்டுள்ளது.

ராட்லர் தமிழ்-ஆங்கில அகராதி

கி.பி.1830இல் டாக்டர் ராட்லர்(Dr.J.P.Rattler) என்பவரால் இது தொகுக்கப்பட்டது. இது 4 தொகுதிகளை உடையது. மேல்நாட்டில் டெய்லர் பாதிரியார் (Rev.W.Tayler) மற்றும் நம் நாட்டு வெங்கடாச்சல முதலியார் போன்றோரின் ஒத்துழைப்புடன் இவ்வகராதி உருவாக்கப்பட்டது. கி.பி. 1834இல் வேப்பேரியில் முதல் தொகுதியும், கி.பி.1837இல் இரண்டாம் தொகுதியும், கி.பி. 1839இல் மூன்றாம் தொகுதியும், கி.பி.1841இல் நான்காம் தொகுதியும் வெளிவந்தன. இது 1425 பக்கங்களும் 36,901 சொற்களும் கொண்டுள்ளது. தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறுவது இவ்வகராதியின் சிறப்பாகும்.

வின்ஸ்லோ ஆங்கில-தமிழ் அகராதி

இவ்வகராதி கி.பி.1842இல் வின்லோ பாதிரியாரால்(Rev.M.Winslow) உருவாக்கப்பட்டது. இதில் ஆங்கிலத்திற்கு நேராகத் தமிழ்ச் சொல்லில் பொருள் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதி

தமிழ் அகராதிகளில் இது மிகப்பெரியதாகும். இது நான்கு தொகுதிகளும் 58,500 சொற்களும் கொண்டது. சந்திரசேகர பண்டிதர் என்பவரால் கி.பி.1842இல் இது தொகுக்கப்பட்டது. இதில் சொற்களும் அவற்றின் பொருளும் அகர வரிசையில் அமைந்துள்ளது. “மானவெல் தமிழ் அகராதி” என்றும் “மனிப்பாய் தமிழ் அகராதி” என்றும் இது அழைக்கப்படுகின்றது. லெவி ஸ்பால்டிங்(Rev.Levi.Spaulding) என்ற பாதிரியார் பின்னர் இதைப் பதிப்பித்தார்.

ஸ்டால்டிங் ஆங்கில-தமிழ் அகராதி

இவ்வகராதி கி.பி.1844இல் ஸ்டால்டிங்(Fr.Stalding) பாதிரியாரால் உருவாக்கப்பட்டது. இதில் ஆங்கிலச் சொற்களுக்கு நேராகத் தமிழ்ச் சொல்லில் பொருள் வழங்கப்பட்டுள்ளது.

பெர்சிவல் ஆங்கில-தமிழ் அகராதி

பீட்டர் பெர்சிவல்(Rev.Peter Percival) என்ற பாதிரியார் இதை உருவாக்கினார். ஆங்கிலச் சொல்லுக்கு இதில் தமிழ்ச் சொல்லில் பொருள் கூறப்பட்டுள்ளது.

இலத்தீன்-பிரெஞ்சு-தமிழ் அகராதி

இவ்வகராதி புதுச்சேரியில் கி.பி.1846இல் வெளிவந்தது. முய்சே(L.Mouset) மற்றும் துய்புய்(L.Dupus) என்ற பிரெஞ்சு அறிஞர்களால் இவ்வகராதி உருவாக்கப்பட்டது. இலத்தீன் சொல்லுக்குப் பிரெஞ்சு சொல் வழியே பொருளும், அதற்குத் தமிழ்ச்சொல்லின் வழியே பொருளும் கூறுவது இதன் சிறப்பாகும்.

தமிழ்-பிரெஞ்சு அகராதி

இவ்வகராதி இரண்டு பாகங்களும் 2038 சொற்களும் கொண்டது. புதுச்சேரியில் கி.பி.1855இல் முய்சே மற்றும் துய்புய் போன்ற அறிஞர்களால் இது உருவாக்கப்பட்டது. இதன் முதல் தொகுதியில் 763 சொற்களும் இரண்டாம் தொகுதியில் 867 சொற்களும் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் சொல்லுக்குப் பிரெஞ்சு சொல்லால் பொருள் கூறுவது இதன் சிறப்பு.

போப் தமிழ்-ஆங்கில அகராதி

ஜி.யு.போப்(GeorgeUglow Pope) என்ற மேல்நாட்டு தமிழறிஞர் கி.பி. 1859இல் சென்னையில் இவ்வகராதியை உருவாக்கினார். இது 98 பக்கங்கள் கொண்ட சிறிய அகராதியாகும். இதில் தமிழுக்கு நேரான ஆங்கில வார்த்தையில் பொருள் கூறப்பட்டுள்ளது.

வின்சுலோ தமிழ் அகராதி

கி.பி.1862இல் வின்லோ பாதிரியார் மிகச்சிறப்பான இவ்வகராதியைத் தொகுத்தார். இதில் 67,452 சொற்கள் உள்ளன. நைட்(Rev.J.Knight), திசிரா(Mr.Tissera), பெர்சிவல்(Rev.P.Percival), ஸ்பால்டிங்(Rev.L.Spaulding) மற்றும் ஹட்சிங்(Rev.C.Hutching) போன்றோரின் சொற் தொகுப்புகளிலிருந்து தேவையானவற்றைத் தொகுத்து இவ்வரிய அகராதியை இவர் உருவாக்கினார். இக்கடினமான பணியில் இவருக்கு இராமசாமி

கவிராயர், விசாகப் பெருமாள் ஐயர், வீராசாமி செட்டியார், ஆதிமூல முதலியார், அப்ரகாம் ஆலின் போன்ற தமிழ் அறிஞர்கள் பேருதவி புரிந்தனர். தமிழ்ச் சொல்லுக்கு நேராக ஆங்கிலச் சொல்லில் பொருள் கூறுவது இவ்வகராதியின் சிறப்பாகும்.

தமிழ்-இலத்தீன் அகராதி

இது கே.பி.குரி(Fr.R.P.Kury) என்ற பாதிரியாரால் கி.பி.1867இல் உருவாக்கப்பட்டது. இவ்வகராதியில் தமிழ்ச் சொல்லுக்கு இலத்தீன் சொல்லில் பொருள் கூறப்பட்டுள்ளது.

தரங்கம்பாடி அகராதி

இது தரங்கம்பாடியில் உள்ள டேனிய பாதிரிமார்களால் கி.பி.1897இல் உருவாக்கப்பட்டது. இதில் 33,000 சொற்கள் உள்ளன. இதில் தமிழ் வார்த்தைகளுக்கு நேராக ஆங்கில வார்த்தைகளில் பொருள் கூறப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பதிப்பு கி.பி.1910இல் பெய்சென்ர்ஸ்(Rev.H.Beisenherz) என்ற பாதிரியாரால் பதுப்பிக்கப்பட்டது. மூன்றாம் பதிப்பு கி.பி.1933இல் பெக்ஸல்(Rev.Bexell) என்ற பாதிரியாரால் பதுப்பிக்கப்பட்டது.

தமிழ்-பிரெஞ்சு அகராதி

இவ்வகராதி எம்.ஏ.லேப்(Mr.M.A.Lap) என்பவரால் உருவாக்கப்பட்டது. இவ்வகராதியில் பெயர், வினைச் சொற்களின் தொடர்பதிவுகள் தனித்துக் காட்டப்பட்டுள்ளது இதன் சிறப்பு. இதன் இரண்டாம் பதிப்பு கி.பி.1926இல் வெளியிடப்பட்டது.

பைபிள் அகராதி

இது பைபிளில் காணப்படும் செய்திகளை அகர வரிசையில் தமிழில் கூறப்பட்டுள்ளது. சென்னை சி.எஸ்.ஐ அச்சுக்கூடத்தில் கி.பி.1923இல் கிளேய்டன் (Fr.A.C.Clayton) என்ற பாதிரியாரால் இது உருவாக்கப்பட்டது.

முடிவுரை

தமிழ் மொழி மிகவும் பழம் பெருமை வாய்ந்த மொழியாகும். இதற்குப் பல்வேறு காலகட்டங்களில் பலர் தங்கள் பங்களிப்பை நல்கிவிட்டுச் சென்றுள்ளனர். தமிழ் மொழி செம்மையாய் அமைவதற்கு மேல் நாட்டவரின் பங்களிப்பு அளப்பரியதாகும். கடல் கடந்து சமயப்பணி புரியப் போந்த அவர்கள் அமிழ்தினும் இனியதமிழ் மொழியால் கவரப்பட்டு அதனை ஐயந்திரிபறக்கற்று அதற்கு

அருந்தொண்டாற்ற முனைந்தனர். குறிப்பாக மொழிக்கு அகராதி அவசியம் என்பதை நன்குணர்ந்து அவற்றை உருவாக்க அரும்பாடுபட்டனர். வீரமாமுனிவர் உருவாக்கிய சதுரகராதியே தமிழில் தலைசிறந்த அகராதியாக இன்று வரை திகழ்வது இதற்குச் சாலச்சிறந்த சான்றாகும். உலகின் தலைசிறந்த அகராதியாகக் கருதப்படும் டாக்டர் சாமுவேல் ஜான்சன் (Dr.Samuel Johnson) கி.பி.1755இல் உருவாக்கிய "ஆங்கில மொழியின் அகராதி" (A Dictionary of English Language) என்ற நூல் தோன்றுவதற்கு 23ஆண்டுகளுக்கு முன்பே இந்நூல் வெளிவந்தது இதன் சிறப்பு. எனவே உலகில் திருத்தமுறத் தோன்றிய முதல் அகராதி என்ற சிறப்பை இந்நூல் பெறுகின்றது. கொடுந்தமிழைத் திருத்துவதிலும் தமிழில் அகராதிகளை உருவாக்குவதிலும் வீரமாமுனிவரின் பங்கு அளப்பறியதாகும். தமிழர்கள் அவர் உருவாக்கியளித்த அகராதிகளுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளனர். புராதனப் பழம் சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது நீண்ட காலப்போக்கினைக்கொண்டது. அவற்றில் தமிழ் மொழிக்கென்று மிகச்சிறப்பான அகராதிகளை உருவாக்கியளித்து, நம் அன்னைத் தமிழுக்கு அயல்நாட்டிலிருந்து வந்து அருந்தொண்டாற்றிய மேல்நாட்டு அறிஞர்களின் பணிகளையும் பங்களிப்பையும் என்றும் மறுக்கவோ, மறக்கவோ இயலாது.

துணைநூற்பட்டியல்

1. வீராசாமி.தா.வே,அகராதிக் கலை (1989) சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்
2. மாதையன்.பெ,அகராதியியல் (1997) தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்
3. பாலசுப்பிரமணியன்.சி, தமிழ் இலக்கிய வரலாறு (1959) சென்னை: மணமலர்ப் பதிப்பகம்
4. வரதராசன்.மு, தமிழ் இலக்கிய வரலாறு (1972) புது டெல்லி: சாகித்திய அகாடமி.